# கணக்கீடு

## உற்பத்தி வணிகமொன்றின் நிதிக்கூற்றுக்கள்



The National e-learning Portal for The General Education

Start Your Learning Journey with e-thaksalawa

**தேர்ச்சி 7.0 உற்பத்தி வணிகமொன்றின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பர்.**

**தேர்ச்சி மட்டம் 7.1 உற்பத்தி வணிகமொன்றில் உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பார்.**

### உற்பத்தி நிறுவனம்
### (Manufacturing Business Organazation)

பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிறுவனத்தையே உற்பத்தி நிறுவனம் எனலாம்.

### எமது நாட்டில் காணப்படும் உற்பத்தி நிறுவனங்கள் சில.

- ஆடை உற்பத்தி
- மரவேலைகள் உற்பத்தி
- அச்சக உற்பத்திகள்
- மட்பாண்ட உற்பத்திகள்
- வெதுப்பக(பேக்கரி) உற்பத்திகள்

### உற்பத்திக்கிரயம்
### (Cost Of Production )

குறித்த காலப்பகுதியில் பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்வதற்கு ஏற்படுகின்ற செலவீனங்களின் கூட்டுத்தொகை உற்பத்திக்கிரயம் எனப்படும்.

### உற்பத்திக் கிரயத்தை கணிப்பதன் முக்கியத்துவம் / அவசியம்.

⇒ மொத்த உற்பத்திக் கிரயத்தினைக் கணித்தல்.

⇒ அலகுக்கான உற்பத்திக் கிரயத்தினைக் கணித்தல்.

⇒ உற்பத்திக் கிரய கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல்.

⇒ விலையிடல் தீர்மானம் மேற்கொள்ளல்.

⇒ கொள்வனவு செய்வதா? உற்பத்தி செய்வதா? என்ற உற்பத்தித் தீர்மானம் மேற்கொள்ளல்.

### உற்பத்திக் கிரயத்தினை வகைப்படுத்தல்.

உற்பத்திக் கிரயங்கள் தொடர்புறும் முறை அல்லது கிரயங்களின் தன்மைக்கேற்ப இருவகைப்படுத்தப்படுகின்றது.

- நேர்க்கிரயம் (Direct Cost)
- நேரில்கிரயம் (Indirect Cost)


**Note :-** நேரில் கிரயத்தினை உற்பத்திமேந்தலை, தொழிற்சாலை மேந்தலை எனவும் அழைக்கலாம்.

தொகுப்பு :- திரு.ந.குமரகுருபரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்).

கணினி வடிவமைப்பு :- திரு.வே.நமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## உற்பத்திக் கிரயத்தினைக் காட்டும் பாச்சற் கோட்டுப்படம்.




### நேர்க்கிரயம்

பொருள் உற்பத்திக்கு நேரடியாக ஏற்படுத்தும் கிரயங்கள்.

### நேரில்கிரயம்

உற்பத்தி "அலகுக்கேற்ப" தெளிவாக இனங்காணமுடியாத உற்பத்தி தொடர்பான அனைத்து பொதுவான செலவீனங்கள்.


### உற்பத்தி வணிகம் ஒன்றில் காணப்படக்கூடிய இருப்புக்களின் வகைகள்.

- ⇒ மூலப்பொருள் இருப்பு
- ⇒ நடைமுறை வேலை இருப்பு / குறைவேலை இருப்பு
- ⇒ முடிவுப் பொருள் இருப்பு

தொகுப்பு :- திரு.ந.குமரகுருபரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்).

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## உற்பத்தி கிரயக் கூறுகள்.
## ( ELEMENTS OF COST OF PRODUCTION )

⇒ மூலக் கிரயம் / முதன்மைக் கிரயம் / ஆரம்பக் கிரயம் [ PRIME COST ]

⇒ உற்பத்தி மேந்தலைகள் [ PRODUCTION OVERHEAD COST ]

## மூலக் கிரயம் / முதன்மைக் கிரயம் / ஆரம்பக் கிரயம்
## ( PRIME COST )

பொருள் ஒன்றின் உற்பத்தியின் போது ஏற்படும் நேர்பொருள் கிரயம், நேர்க் கூலிக் கிரயம், ஏனைய நேர் செலவுகள் என்பவற்றின் மொத்தம் "மூலக்கிரயம்" எனப்படும்.



**மூலக்கிரயம்**

நேர் பொருள் கிரயம் + நேர் கூலிக் கிரயம் + ஏனைய நேர்க் கிரயம்

**உற்பத்தி மேந்தலைகள்**

நேரில் பொருள் கிரயம் + நேரில் கூலிக் கிரயம் + ஏனைய நேரில் கிரயம்



தொகுப்பு :- திரு.ந.குமரகுருபரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்).

கணினி வடிவமைப்பு :- திரு.வே.நமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**உற்பத்திக் கிரயம்**

**மூலக் கிரயம்** + **உற்பத்தி மேந்தலைக் கிரயம்**

## நேர் பொருட் கிரயம்
## ( DIRECT MATERIAL COST )

உற்பத்திக்கு நேரடியாக ஏற்படுத்துவதும் உற்பத்தி அலகுகளுடன் தெளிவாக வேறுபடுத்தி இனங்காணக்கூடிய பொருட் கிரயங்களை குறிக்கும்.

| உற்பத்தி நிறுவனம் | நேர் பொருள் கிரயம் |
|---|---|
| வெதுப்பகம் (பேக்கரி) | கோதுமை மா |
| தளபாட உற்பத்தி நிறுவனம் | மரப்பலகை |
| அச்சக உற்பத்தி நிறுவனம் | கடதாசி , மை |
| ஆடை தைக்கும் நிறுவனம் | துணிவகைகள் |
| மட்பாண்ட உற்பத்தி நிறுவனம் | களிமண் |

## நேர் உழைப்புக் கூலிக்கிரயம் (DIRECT LABOUR COST)

உற்பத்தி அலகுகளுடன் தெளிவாக இனங்காணக் கூடியதும், உற்பத்திகளில் நேரடியாக பங்களிப்பு செய்யும் உழைப்புக்காக செலுத்தப்படும் கூலிகள் ஆகும்.

| உற்பத்தி நிறுவனம் | நேர் கூலிக் கிரயம் |
|---|---|
| வெதுப்பகம் (பேக்கரி) | பாண் தயாரிப்பவர் கூலி |
| தளபாட உற்பத்தி நிறுவனம் | மரவேலை செய்பவர் கூலி |
| அச்சக உற்பத்தி நிறுவனம் | புத்தகம் அச்சிடுபவர் கூலி |
| ஆடை தைக்கும் நிறுவனம் | தையல் இயந்திரம் இயக்குபவர் கூலி |
| சப்பாத்து உற்பத்தி நிறுவனம் | சப்பாத்துத் தைப்பவர் கூலி |

தொகுப்பு :- திரு.ந.குமரகுருபரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்).

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## நேர் ஏனைய கிரயங்கள் (DIRECT OTHER COST)

உற்பத்தியின் போது பயன்படுத்தப்படும் நேர் பொருள் கிரயம், நேர் கூலிக் கிரயம் தவிர்ந்த நேரடியாக ஏற்பட்ட வேறு செலவுகள் ஏனைய நேர் கிரயம் எனப்படும்.

| உற்பத்தி நிறுவனம் | நேர் ஏனைய கிரயங்கள் |
|---|---|
| ஆடை தைக்கும் நிறுவனம் | விசேட ஆடைவடிவமைப்பாளர் கட்டணம் |
| அச்சகம் | புத்தகம் ஆக்கியோனுக்கான எழுத்துரிமை, பதிப்புரிமை கட்டணம் |

## நேரில் பொருள் கிரயம் (INDIRECT METERIAL COST)

உற்பத்தியின் போது பயன்படுத்தும் உற்பத்தி அலகொன்றுடன் நேரடியாக இனங்காண முடியாத பொருளுக்காக ஏற்படும் செலவுகளைக் குறிக்கும்.

| உற்பத்தி நிறுவனம் | நேரில் பொருள் கிரயம் |
|---|---|
| தளபாட உற்பத்தி நிறுவனம் | மணல் கடதாசி , ஆணி |
| அச்சக உற்பத்தி நிறுவனம் | நூல் , ஒட்டும் பசை |
| ஆடை தைக்கும் நிறுவனம் | பொத்தான், தையல் நூல், இலட்சனை |
| தானியங்கள் அரைக்கும் ஆலை | உராய்வு நீக்கி எண்ணெய் |

## நேரில் கூலிக் கிரயம் (INDIRECT LABOUR COST)

உற்பத்தி நடவடிக்கையுடன் நேரடியாக தொடர்புபடுத்த முடியாத ஊழியருக்கான கொடுப்பனவுகள் ஆகும்.

| உற்பத்தி நிறுவனம் | நேரில் கூலிக் கிரயம் |
|---|---|
| தளபாட உற்பத்தி நிறுவனம் | மேற்பார்வையாளர் சம்பளம் |
| ஆடை தைக்கும் நிறுவனம் | முகாமையாளர் சம்பளம் |
| அச்சக உற்பத்தி நிறுவனம் | பாதுகாப்பு உத்தியோகத்தர் சம்பளம் |

தொகுப்பு :- திரு.ந.குமரகுருபரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்).

கணினி வடிவமைப்பு :- திரு.வே.ற‌மணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## ஏனைய நேரில் கிரயம் (INDIRECT OTHER COST)

உற்பத்தி அலகொன்றுடன் திட்டவட்டமாக இனங்கான முடியாத நேரில் பொருள் கிரயமும், நேரில் கூலிக் கிரயமும் தவிர்ந்த ஏனைய செலவுகள் “ஏனைய நேரில் செலவுகள்” எனப்படும்.




## உற்பத்தி மேந்தலைக் கிரயம் (PRODUCTION OVERHEAD COST)

உற்பத்தி அலகுக்கேற்ப தெளிவாக இனங்கான முடியாத உற்பத்தி தொடர்பான அனைத்துப் பொதுவான செலவீனங்களும் “உற்பத்தி மேந்தலைக் கிரயம்” எனப்படும்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## உற்பத்திக் கிரய அட்டவணையின் மாதிரி
## (FORMATION FOR STATEMENT OF MANUFACTURING)

மங்களா தளபாட வணிகத்தின்

20xx மார்ச் மாத கிரய அட்டவணை

ரூபா

| | | |
|---|---|---|
| மூலக்கிரயம் | | |
| நேர் மூலப் பொருள் - மரப்பலகை | xxx | |
| நேர் கூலி/உழைப்பு - மரவேலை செய்பவர் கூலி | xxx | |
| ஏனைய நேர் செலவு - ஆக்கவுரிமைக் கட்டணம் | xxx | xxx |
| உற்பத்தி மேந்தலை / தொழிற்சாலை மேந்தலை | | |
| நேரில் பொருள் - மணல் கடதாசி | xxx | |
| நேரில் கூலி - மேற்பார்வையாளர் சம்பளம் | xxx | |
| ஏனைய நேரில் கிரயம் - தொழிற்சாலை வாடகை | xxx | |
| - மின்சக்தி | xxx | |
| - இயந்திர சாதன தேய்வு | xxx | |
| - தொழிற்சாலை காப்புறுதி | xxx | xxx |
| | | xxx |
| (+) ஆரம்ப நடைமுறை வேலை | xxx | |
| (-) இறுதி நடைமுறை வேலை | (xxx) | xxx |
| (உற்பத்திக் கிரயம் இலாபநட்ட கூற்றுக்கு மாற்றம்) | | xxxx |

தொகுப்பு :- திரு.ந.குமரகுருபரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்).
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## ஓட்டு உற்பத்தி வணிகம் ஒன்றில் இடம்பெற்ற கிரயங்களும் உற்பத்திக் கிரய அட்டவணையும்.

குமரன் ஓட்டு உற்பத்தி தொழிற்சாலையில் இடம்பெற்ற
2018 மார்ச் மாத கிரயத் தகவல் வருமாறு.

| | ரூபா |
|---|---|
| நேர் மூலப்பொருள் - களிமண் | 145,000 |
| நேர் கூலிகள் - உற்பத்தி தொழிலாளர் சம்பளம் | 25,000 |
| ஏனைய நேர் செலவு - விசேட வடிவமைப்பாளர் கட்டணம் | 5000 |
| நேரில் மூலப் பொருள் - நிறப்பூச்சு | 12,000 |
| - எரிபொருள் | 7000 |
| நேரில் கூலி - பாதுகாவலர் சம்பளம் | 8000 |
| - மேற்பார்வையாளர் சம்பளம் | 20,000 |
| ஏனைய நேரில் செலவு - மின்சாரமும் வலுவும் | 2500 |
| - இயந்திர சாதன தேய்வு | 500 |
| - தொழிற்சாலை வாடகை | 2000 |
| 01.03.2018 இல் ஆரம்ப நடைமுறை வேலை | 15,000 |
| 31.03.2018 இல் இறுதி நடைமுறை வேலை | 10,000 |

குமரன் ஓட்டு உற்பத்தி வாணிபத்தின்
2018 மார்ச் மாத உற்பத்திக் கிரய அட்டவணை.

| | | ரூபா |
|---|---|---|
| மூலக்கிரயம் | | |
| நேர் மூலப் பொருள் - களிமண் | 145,000 | |
| நேர் கூலி/உழைப்பு - உற்பத்தி தொழிலாளர் சம்பளம் | 25,000 | |
| ஏனைய நேர் செலவு - வடிவமைப்பாளர் கட்டணம் | 5000 | 175,000 |
| உற்பத்தி மேந்தலை / தொழிற்சாலை மேந்தலை | | |
| நேரில் பொருள் - நிறப்பூச்சு | 12,000 | |
| - எரிபொருள் | 7000 | |
| நேரில் கூலி - பாதுகாவலர் சம்பளம் | 8000 | |
| - மேற்பார்வையாளர் சம்பளம் | 20,000 | |
| ஏனைய நேரில் கிரயம் - மின்சாரம் வலு | 2500 | |
| - இயந்திர சாதன தேய்வு | 500 | |
| - தொழிற்சாலை வாடகை | 20,000 | 70,000 |
| | | 245,000 |
| (+) ஆரம்ப நடைமுறை வேலை | 15,000 | |
| (-) இறுதி நடைமுறை வேலை | 10,000 | 5000 |
| (உற்பத்திக் கிரயம் இலாபநட்ட கூற்றுக்கு மாற்றம்) | | 250,000 |

தொகுப்பு :- திரு.ந.குமரகுருபரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்).
கணினி வடிவமைப்பு :- திரு.வே.ரமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk